தியாகராய கல்லூரி விடுதியில் மஞ்சள் காமாலையினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள்

*210 **வினா.—திரு. எஸ். ஜே. இராமசாமி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-ம் ஆண்டு செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் சென்னை தியாகராய கல்லூரி விடுதி மாணவர்களுள் சிலர் மஞ்சள் காமாலை ஏற்பட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்களா ?

(இ) ஆம் எனில், எத்தனை மாணவர்கள் அவ்வாறு பாதிக்கப் பட்டனர்?

(உ) இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) சுமார் 16 விடுதி மாணவர்கள் பாதிக்கப்பட்டனர்.

(உ) நடவடிக்கை தேவை என்று இது விஷயம் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை.

Bridge across Thambiravarani near Srivaikuntam Railway Station

*211 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is proposed to broaden the existing bridge over the Thambiravarani near Srivaikuntam Railway Station in Tirunelveli district ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஸ்ரீ வைகுண்டம் ரயில் நிலையத்திற்கருகில் தாமிரவருணியாற்றின் குறுக்கே தற்போதுள்ள பாலத்தை அகலமாக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

(இ) இவ் வினா எழவில்லை.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார். இப்பொழுது அந்தப் பாலத்தில் போக்கு வரத்து அதிகமாக ஆகியிருக்கிறபடியால், ஒரு இடத்தில் ஒரு பஸ் வருகிறபொழுது, எதிர்த்தாற் போல் இன்னொரு வண்டி வரமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக இனிமேலாவது அந்தப் பாலத்தை அகலப்படுத்தும் திட்டம் பற்றி இந்த அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதனை அகலப்படுத்துவதற்கு ரூபாய் 5 லட்சம் வரையில் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது 18 அடி அகலம் தான் இந்த சாலை இருக்கிறது. இருக்க வேண்டிய அகலம் 24 அடிக்குக் குறைவாக இருந்தாலும், தற்பொழுது நடைபெறுகிற போக்குவரத்திற்கு அது இடைஞ்சலாக இல்லை என்று பொறியாளர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

சாலைகள்

* 212 **வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் வட்டம், செய்யூரிலிருந்து பனையூர் செல்லுகின்ற சாலை மழைக்காலங்களில் பெருஞ் சேதம் அடைவதால் நிரந்தரமான நிலையில் அதை அமைக்கின்ற உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?